பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880

# Arunan's Kadambavanathu Alayam

**K. Amudha Valli,** Tamil Ph.D. Research Scholar, Reg.No. PHDTAM21P005, Jayaraj Annapackiam College for Women, Periyakulam, Affiliated to Mother Teresa Women's University, Kodaikanal, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0007-4501-7446
**Dr. J. Arul Irudaya Jeyanthi,** Associate Professor of Tamil, Jayaraj Annapackiam College for Women, Periyakulam, Affiliated to Mother Teresa Women's University, Kodaikanal, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0008-7640-5510
**DOI: 10.5281/zenodo.19532578**

## Abstract

*Literature is a reflection of society. It is also a force for social change. Tamil novels are an authoritative medium for recording social changes that have happened in a society. One can find the lives of people and literature tangled all the way along. Reconstruction is an attempt to bring the heritage of a society and create new ideas. Many writers have portrayed this in various ways through their novels. These novels re-examine human life, religion, gender, language, history, etc. Similarly, the Tamil writer Arunan presents his work in various ways as naturally, blissful and elegant to reveal the completeness of his work. The novel 'Kadambhavanam' is a social novel. However, religious ideas also appear in it. He brings the epoch of Madurai before our eyes. In them, the ideas about the Meenakshi Amman temple and the lifestyle of the priests and pattamars living there are portrayed. He has depicted the Saiva temple Meenakshi Amman temple and the Vaishnava temple Alagar temple in his work. He also describes the Thirumal Solai Murugan temple in detail. This article portrays the lives of people and literature are connected all the way along and examines the restoration of the Meenakshi temple in Arunan's novel "Kadambhavanam".*

**Keywords:** Harijanam, Pattabhishekam, Varnam, Arunan, *Kadambhavanam.*

## References

[1] Iraj Gauthaman. *Kalithokiya-Paribadal Collection*. New Century Book House Publishing House, 2020.
[2] I.Ilangumaran. *Maduraikanchi*. Purakshik Kavinjar Manram Publishing House, Madurai - 2014.
[3] Puliyur Keshikan. *Silappadhikara Kachharai*. Kotravai Publishing House, 2014.
[4] Arunan. *Kadambavanam*. Vasantham Publishing House, Madurai 2015.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்*



**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*
**Volume 6, Issue 1, November 2025** **E-ISSN: 2583-0880**

# அருணனின் கடம்பவனத்து ஆலயம்

**க. அமுத வள்ளி,** தமிழ் முனைவர்பட்ட ஆய்வாளர், பதிவுஎண்: PHDTAM21P005,
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி, பெரியகுளம், அன்னை தெரசா மகளிர்
பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, கொடைக்கானல், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0007-4501-7446**
**முனைவர் ஜெ. அருள் இருதய ஜெயந்தி**, இணைப் பேராசிரியர், முதுகலைத் தமிழ் உயராய்வு மையம்,
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி, பெரியகுளம், அன்னை தெரசா மகளிர்
பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, கொடைக்கானல், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0008-7640-5510**
**DOI: 10.5281/zenodo.19532578**

**ஆய்வுச்சுருக்கம்**

*இலக்கியம் என்பது சமூகத்தின் பிரதிபலிப்பு மட்டுமல்ல; அது சமூகத்தை மாற்றும் சக்தியுமாகும். தமிழ் நாவல்கள், சமூக மாற்றங்களைப் பதிவு செய்யும் ஓர் சக்திவாய்ந்த ஊடகமாக விளங்குகின்றன. ஏனெனில், அவற்றுள் தமிழர் தம் வாழ்வும் இலக்கியங்களும் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. மீட்டுருவாக்கம் என்பது ஒரு சமூகத்தின் பழைய அமைப்புகளை மீள்பார்வை செய்து, புதிய சிந்தனைகளை உருவாக்கும் முயற்சிகளாக அமைகின்றன. இதைப் பல்வேறு எழுத்தாளர்கள் நாவல்களின் வழியாகப் பல்வேறு விதமாக மீள்பார்வையில் சித்தரித்துள்ளனர். இந்நாவல்கள் மனித வாழ்க்கை, மதம், பாலினம், மொழி, வரலாறு போன்றவற்றை மறுபரிசீலனையுடன் மீளமைக்கின்றன. அதுபோலவே நூலாசிரியர் அருணன் அவர்களும் தன்னுடைய படைப்பின் முழுமையை வெளிக்கொணர பல்வேறு விதங்களில் வெகு இயல்பாகவும் நேர்த்தியாகவும் எடுத்துரைக்கிறார். நூலாசிரியர் 'கடம்பவனம்' என்பது ஒரு சமுதாய நாவல். ஆயினும் சமயம் சார்ந்த கருத்துக்களும் இடம்பெறுகின்றன. அக்கால மதுரையை நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்தி விடுகிறார். அவற்றில் மீனாட்சி அம்மன் கோவில் பற்றியும் அங்கு வாழ்கின்ற புரோகிதர்கள், பட்டமார்கள் வாழ்வியல் பற்றிய கருத்துகளும் பிண்ணிப் பிணைந்து காணப்படுகின்றன. சைவ கோயிலான மீனாட்சி அம்மன் கோயில் மட்டுமல்லாமல் அருகில் அமைந்துள்ள வைணவ கோவிலான அழகர் கோவிலைப் பற்றியும் அழகாகப் படைத்துள்ளார். திருமாலின் சோலை முருகன் கோவிலைப் பற்றியும் விரிவாக எடுத்துரைக்கிறார். இந்த ஆய்வு அருணனின் புதினமான கடம்பவனத்தில் மீனாட்சி ஆலய மீட்டுருவாக்கத்தை ஆராய்வதாக அமைகின்றது.*

**குறிப்புச் சொற்கள்:** ஹரிஜனம், பட்டாபிஷேகம், வர்ணம், அருணன், *கடம்பவனம்.*

**முன்னுரை**

"உலகம் என்பது உயர்ந்தோற் மேற்றே" என்பது சமுதாய நெறி. இந்த நெறி அந்தந்த கால கட்டத்திற்கு ஏற்ப சில இலக்கியங்களில் பிரதிபலிக்கின்றது. அவற்றில் சிற்சில மாற்றங்கள் செய்து தற்கால சூழலுக்கு ஏற்ப இலக்கியங்களை படைப்பதை படைப்பாளரின் நோக்கமாக அமைகின்றது. சுருங்கச் சொன்னால் பழைய காவியத்தை மூலப்பொருளாகக் கொண்டு புதிய கருத்தியலையும், புதிய உணர்வுகளையும், படிப்பவர் உள்ளத்தில் ஏற்படுத்துவதை நீட்டுருவாக்கம் என்று தம் அருணன் தன் உரையில் பகர்கின்றார். அந்த வகையில் மீள் பார்வையின் மூலம் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் பற்பல புதுமைகளை செய்து

தன்னுடைய சிந்தனையை சமூகத்தில் எவ்வாறு வெளிப்படுத்துகிறார் என்பதனை ஆய்வதே இக்கட்டுரையில் நோக்கமாக அமைகின்றது.

**கடம்பவனம் பெயர்க் காரணம்**

> **மணிவாயில் மாநகர் மாதேகைப் பண்டம்**
> **செல்வ வளம் சூழ்ந்தது சீர்மதுரை (மதுரைகாஞ்சி)**

என்ற வரிகள் மதுரையை மணிவாயில் நகரம் என்று அழகாக வர்ணிக்கின்றன.இது மீனாட்சி அம்மன் கோவிலின் மையத்தில் உருவான நகரத்தின் செழிப்பை உணர்த்துகிறது.அதே போல் திருவிளையாடல் புராணம் படி மீனாட்சி அரசி புவியில் அவதரித்து சிவபெருமானுடன் புரிந்த திருவிழா நிலையே இந்தக் கோவில் ஆகும். மீனாட்சி அம்மனின் தல விருட்சம் கடம்பவன மரம் எனலாம்.

நூலாசிரியர் அருணனுடைய புதினத்தின் பெயரே 'கடம்பவனம்'. இயற்கை சூழலைக் குறிக்கும் தலைப்பு. கடம்பவனம் என்பது கடம்பவன மரங்கள் நிறைந்த கானகம் என்று பொருள் தரும். மதுரைக்கு கடம்பவனம் என்ற பெயருண்டு. நூலாசிரியர் தனது புதினத்தில் மதுரை நகரில் இயற்கை வளத்தை, வைகை நதி தீரத்தை, மீனாட்சி சொக்கநாதர் கோயிலை சுற்றியுள்ள வீதிகளை, தெருக்களை, இடங்களை என மதுரையின் அக்கால மதுரை சுற்றுச்சூழலை நாம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார். புதினத்தின் ஆரம்பத்திலேயே மின்சாரம் இல்லாத அக்கால மதுரையை விளக்குகிறார்.

> **அம்மாவாசைக்கு அடுத்த அந்த இரவில் வானத்தில் நட்சத்திரங்கள் மட்டுமே கொட்டு கொட்டு என்று விழித்திருந்தன. ராணியை தொலைத்துவிட்ட தோழிகள் போல கீழப்பட்டமார் தெருவிலும் மேல பட்டமார் தெரிவிலும் அன்று யாரும் தூங்கவில்லை. தெருமுனைகளில் அழுது வடிந்து கொண்டிருந்த முட்டை விளக்குகள் இவர்களுக்குப் போதவில்லை. வீட்டு திண்ணைகளில் அறிக்கையின் விளக்குகளை ஏற்றி வைத்துக் கொண்டு விடிய விடிய பேசிக் கொண்டிருந்தார்கள். (*கடம்பவனம்*. பக். 7)**

இவ்வாறு நூலாசிரியர் மதுரையின் பல்வேறு பகுதிகளையும் வருணனை செய்துள்ளார். மதுரையை சுற்றியுள்ள பகுதிகளை இயற்கை அழகுடன் இணைத்து வர்ணித்துள்ளமை மிகவும் சிறப்பிற்குரியது.

**மீனாட்சி கோயில்**

மீனாட்சி அம்மன் கோவில் இந்தியாவின் ஏழு அதியங்களில் ஒன்றாகப் போற்றப்படும் பாரம்பரிய தலம். உலகம் முழுவதும் இருந்து மக்கள் வருகை தரும் ஆன்மிக மையம் என்பதனை, **"பூம்புகழ் பாண்டிய மண் புகழ் உலகொடு ஒளிர்ந்தது"** என்ற பரிபாடல் வரியின் மூலம் அறியலாம். மீனாட்சி அம்மன் கோவிலில் பதினான்கு கோபுரங்கள் உள்ளன. மிகப்புகழ் பெற்ற ஆயிரங்கால் மண்டபம் உள்ளது. சங்கப்பாடல்கள் மதுரையை மண்டபம் நிறைந்த மாநகரம் என வர்ணிக்கின்றன. அதே போல் மதுரையைத் திரு மங்கைகளின் தாயகம் என்றே கூறலாம். கடம்பவனத்தில் புரட்டாசி, ஐப்பசி தேவியின் மாதங்கள். அவளின் பெயரைச் சொல்லி ஊர் பெண்கள் கோவிலை ஆக்கிரமித்துக் கொள்வார்கள். அம்மன் சன்னதி பிரகாரத்திலிருந்து கொலு மண்டபத்தில் மீனாட்சி தினசரி தினசு தினுசான கோலத்தில் காட்சி தந்தாள். மன்னாதி மன்னர்கள் தந்த வைர வைடூரிய கிரீடங்களும் அட்டிகைகளும் அம்மனை அலங்கரித்தன. மின்சார ஒளியிலும் தீவட்டி வெளிச்சத்திலும் அவை மின்னியல் மின்னியதும் கண்கள் கூசின.

கொலு மண்டபத்தின் இரு புறத்திலும் வெள்ளித் தகடுகள் போர்த்தப்பட்ட அவளின் வாகனங்கள். இடதுபுறத்தின் ஒரு பகுதியில் கொலு வைக்கப்பட்டிருந்தது. அங்கே மந்திரிகளும், தளபதிகளும், பிரதானிகளும், தாசிகளும், நட்டுவனாரும், மக்களும்

வரிசைக்கிரமமாக இருந்தார்கள். இதன் தாத்பரியம் என்ன? தனது ஆளுகையைத் தேவி ஆண்டுதோறும் புதுப்பித்துக் கொள்கிறார்களோ? இவ்வளவு பேரும் இவளுக்கு அடங்கியவர்கள் மட்டுமல்ல. அந்த வரிசைக்கும் அடங்கியவர்கள்! "வரிசை குலையாமல் இருக்கிறோம் பார் தாயே" என்று வருஷம் தோறும் நின்று காண்பிக்கிறார்களோ? சமூகம் அப்படியே இங்கே பொம்மலாட்டம் ஆடிக் கொண்டிருக்கிறது. (ப. 283) என்ற வரியின் மூலம் தற்காலத்திலும் மக்கள் வரிசை குலையாமல் அதே வரிசையில் நின்று தெய்வத்தை வணங்குவதன் மூலம் சமுதாயத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. பொம்மலாட்டம் போல் அதே நிலையில் தான் நின்று கொண்டிருக்கின்றது என்று நூலாசிரியர் திறம்பட எடுத்துரைக்கிறார்.

**சொக்கநாதர் சன்னதி**

மதுரையில் நிகழ்ந்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களின் முக்கிய தளமாக சொக்கநாதர் சன்னதி விளங்குகிறது.அன்பு, கருணை, சிவஞானத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளன சொக்கநாதர் சன்னதி. சொக்கநாதர்- மீனாட்சி திருமணம் இந்த சன்னதியிலேயே நடந்தது. **"மணமகள் மண்ணரசுக்கு மணந்த மடநகர் மதுரை**" என இக்கோயில் சிவ வழிபாடு நடந்ததனை சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.மதுரை தெய்வத் திருமணமும் பட்டாபிஷேக தரிசனமும் ஒன்றாக விளங்க கூடியது. ஹரிஜன ஆலய பிரவேசம் பற்றி வெகு அருமையாக கடம்பவன புதினத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. அதன் மூலமாக தீண்டாமை எனும் தீய சக்தியின் விளைவிற்கு முற்றுப் புள்ளி வைக்கிறார் நூலாசிரியர்.

> **சுந்தரேஸ்வரர் சன்னதியில் ஐந்து கொடிகள் ஏற்றி ஆயிற்று பனிரெண்டு நாள் விழாவுக்கு மாணிக்கவாசகரும், சுப்பிரமணியரும் வந்தாயிற்று. இந்த ஆவணி மூல விழாவில் அறுபத்தி நாலு திருவிளையாடல்களையும் எட்டு எட்டாகப் பிரித்துக் கொண்டு எட்டு நாட்களில் நடத்திக் காண்பிக்கிறார்கள் ஏழாவது நாளில் சுவாமி சன்னதியின் ஆறுகால் பீடத்தில் சுந்தரேஸ்வரருக்கு பட்டாபிஷேகம் நடைபெறும். (*கடம்பவனம்*, பக். 388)**

அந்நாட்களில் அனைத்து வகை தீபங்களால் சுந்தரேஸ்வரர்க்கு அபிஷேகம் நடைபெற்றது. அந்த வேள்வியல் மெல்ல மெல்ல செங்கோலை சுந்தரேஸ்வரர் திருமேனியிலிருந்து பட்டர் எடுத்தார். இரு கைகளாலும் அதைத் தாங்கி நாயுடு பக்கம் திரும்பினார். அவர் அனிச்சை செயலால் தனது கரங்களை நீட்டவும் அவற்றில் பத்திரமாக ஒப்படைத்தார். அதை மார்போடு அணைத்துக்கொண்டார். அவர் கூட்டம் "ஹரஹர மகாதேவா!" என்றது. நெல்லை பட்டம் மார்கள் முகத்தில் பெரும் நிம்மதி தாங்கள் தப்பித்தோமென்று இவரை பரிதாபமாக பார்த்தார்கள். நாயுடு மனதில் கவலையும் இல்லை. ஆனந்தமும் இல்லை. அது அதை எல்லாம் கடந்து இருந்தது. கர்ம யோகியின் பக்குவ நிலை வந்தடைந்து இருந்தது. சொக்கநாதனின் பிரதிநிதியாகப் பூவுலகைப் பாண்டியன் ஆண்டான். பின்னர் நாயக்க மன்னர்கள் ஆண்டார்கள். இன்று சர்க்கார் பிரதிநிதியாகத் தான் செங்கோல் வாங்குவது சரிதான். இடையில் பட்டர்கள் வாங்கியதே சாஸ்திரப் பிழை. வர்ணதர்மப்படி தேசத்தை ஆள வேண்டியது க்ஷத்திரியர்களே தவிர பிராமணர்கள் இல்லையே. இதற்காகத் தன்னை பாவம் சித்திக்காது சொக்கநாதன் தன்னை ஆசீர்வதிப்பான். இதன் மூலமாக கடம்பவனத்தில் சொக்கநாதரின் பட்டாபிஷேகத்தில் அனைத்து இனத்தாரும் கலந்து கொண்டார்கள். சொக்கநாதரும் ஆசீர்வதிப்பார் என்று எடுத்துரைக்கிறார்.

**ஹரிஜன ஆலய பிரவேசம்**

ஆலய பிரவேசம் பற்றி வெகு அருமையாக கடம்பவன புதினத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

> **ஈஸ்வரனுக்கு முனியனின் ஞாபகம் வந்தது பாவி அவசரப்பட்டு விட்டாயே! இதோ நடந்து விட்டதே! நீ நினைத்தது நடந்து விட்டதே, அவனின் சாவினால் தான் இவர்களுக்கு இப்போது கிடைத்ததோ? இருக்கலாம். தனது மனசு திரும்பியதும் கூட அவன் சாவுக்குப் பிறகு தானே. உண்மையான உழைப்பும், அர்த்தமிக்க தியாகமும் ஒரு நாளும் வீணாகாது. குளத்தில் கால் கை கழுவி, மேலேறி வந்து விபூதி பிள்ளையாரை வணங்கி மேலும் உள்ளே போக அனுமதி பெற்றார்கள். அவர் எதிர்ப்பு ஏதும் தெரிவிக்கவில்லை. அம்மன் சன்னதிக்கொள் நுழைந்தார்கள். ஐயரின் முகத்தில் இனம் புரியாத கலவரம். கன்னங்களில் மாறி மாறி போட்டுக் கொண்டே முன்னேறினார். அவர் பின்னாடி கூட்டம் ஆனந்த பரவசமாய் வந்தது. இரண்டாம் பிரகாரத்தை சுற்றி வந்து மகா மண்டபத்திற்குள் நுழைந்தனர். அங்கே நிற்கவில்லை இரும்புக் கிராதியை தாண்டி அர்த்த மண்டபத்திற்குள் நுழைந்தனர் கோஷ்டியினர். வெல வெலத்துப் போய்விட்டார்கள். இதற்குள் எப்படி? திரும்பி ஒரு பார்வை பார்த்தார். அமைதியாக எல்லாரும் அதற்குள்ளும் புகுந்தார்கள். பள்ளியறை கதவுகளில் இருந்து மணிகளை யாரோ தட்டி விட்டிருக்க வேண்டும். கலகலவென்று சிரித்தனர். அம்மன் ஜெகஜோதியாய் தெரிந்தாள்.பச்சை பட்டு உத்தரியத்தில் ஜொலித்தாள். கையில் இருந்த கிளி தெரிந்தது. மூக்குத்தி பளபளத்தது உள்ளே பொன்னுசாமி பட்டர் இருந்தார். வந்தவர் யார் என்று தெரியுமோ? தெரியாதோ? தெரிந்திருக்கும். ஐயரே தெரியாதவர் உண்டோ? கூடவே நாயுடு வேறு. (*கடம்பவனம்,* பக். 344)**

என்ற வரியின் மூலம் ஹரிஜன ஆலய பிரவேசத்தின் மூலம் சமயங்களின் ஒருங்கிணைப்பை சுட்டிக் காட்டுகிறார். அதிலும் முனியனின் இறப்பின் மூலமாக அனைவரும் கோவிலுகுள் செல்லலாம் என்றாகி விட்டது. இதனை ஹரிஜன ஆலய பிரவேசம் வெளியே திரண்டிருந்த மக்களிடம் “மீனாட்சி கோவிலில் ஹரிஜன ஆலய பிரவேசம் நடந்து விட்டதாக ஐயர் அறிவித்தார். கூட்டம் பிரமாதமாய்க் கைதட்டி வரவேற்றது. அது நடந்தது என்றால் வரலாற்றிலேயே அப்போதுதான் நடந்தது. தமிழகத்தில் வேறெங்கும் இன்னும் நடக்காதது. கடம்பவனத்தில் நடந்தது. வந்தவை வார்த்தைகள் அல்ல. புதிய யுகத்தின் மந்திரங்கள். அது சங்கீத சுகம்.” (*கடம்பவனம்,* பக். 344) என்ற வரியின் மூலம் வரலாற்றிலே நடக்காதது கடம்பவனத்தில் நடந்ததாகக் கூறுகிறார்.

**முளைக்கொட்டு திருவிழா**

மதுரையின் பசுமை வளத்தை அடிப்படையாகக் கொண்டே சில விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அவற்றில் முளை, கொட்டை, விதை, பசுமை, வளம் ஆகியவற்றை குறிக்கும் வகையில் அமைகின்றன. இவற்றையெல்லம் படைத்து இறைவனை வழிபடுவது இக்காலத்து செயல்முறைகளில் ஒன்றாகவும் காணப்படுகின்றது. இதனையே சங்க இலக்கியங்களில் புறநானூற்று பாடல்களில் **“பசும்புல் கொண்டு பூசை செய்ய”** என்ற வரியில் பசுமையான தாவரப் பொருட்கள் வழிபாட்டில் பயன்படுத்தப்பட்டதை அறிய முடிகின்றது.அதே போல் பரிபாடலில் மீனாட்சி அம்மன் ஒரு தாய் தெய்வம். அந்த பெண் தெய்வங்களுக்கு வளப்பெறுவிழாக்களான முளை கொட்டுத்திருவிழா நடந்ததாக கூறப்படுகின்றது. இதனை, **“தெய்வத்தின் அருளால் வளம் பொங்கும் மண்”** என்ற வரியின் மூலம் அறியலாம்.

கடம்பவன நாவலிலும் முளைகொட்டுத் திருவிழா நடைப்பெற்றது. “சாந்து பட்டரையும் திருநெல்வேலி பட்டல்களையும் வைத்து ஆடி முளைக்கொட்டு திருவிழாவையும் ஜாம் ஜாம் என்று நடத்திவிட்டார். பாலிகைகளில் நவதானியங்கள் விதைக்கப்படும். முதல் நாள் விழாவிலிருந்து பத்தாம் நாளில் மேளத் தாளத்துடன் குளத்திலிடும் விழா வரை வரிசையாக

நடந்தது. ஒவ்வொரு நாளும் அம்பிகை ஒவ்வொரு வாகனத்தில் ஆடி வீதியில் வலம் வந்தாள். இது அவளுக்கு மட்டுமான விழா. சுந்தரேஸ்வரர் சன்னதிக்குள்ளயே இருந்துவிட்டார். தாயின் ஆட்சி பரிபூரணமாக நடந்தது.” (***கடம்பவனம்,* பக்.** 377) என்ற வரியின் மூலம் முளைகொட்டுத் திருவிழாவின் மூலம் சமுதாய பின்னணியை எடுத்துரைப்பதோடு பல மாற்றங்களையும் முன்னிறுத்தி பேசுகிறார்.

**கள்ளழகர் திருவிழா**

நூலாசிரியர் கடம்பவன புதினத்தில் அந்தக் காலத்தில் எதிரெதிரே இருந்த சைவ, வைணவ மதங்களின் இணைப்பை சித்திரத் திருவிழாவில் ஆற்றில் அழகர் இறங்கும் வைபவம் வாயிலாக குறிப்பிடுகிறார். இந்து மத வழிபாடுகள் இஸ்லாமிய மத சடங்குகள் போன்றிருந்தன என்றும் சுட்டிக்காட்டுகிறார். கள்ளழகரின் தெய்வத்தை வரவேற்று வடகரையோடு திருப்பி அனுப்புகிற இந்த விழா ஏதோ ஒன்றின் அழுத்தமான எச்சமாக தெரிகிறது. தான் வருவதற்கு முன்னாலேயே தங்கை மீனாட்சி திருமணம் முடிந்த கோபத்தில் திரும்பி போவதாக ஐதீகம். ஆண்டுக்கு ஒரு முறை வரிசைகளை பெற்றுக்கொண்டு ஊருக்குள் அவர்கள் வரக்கூடாது என்கிற ஒப்பந்தத்தின் வெளிப்பாடாக அது இருக்கலாம். வைணவ பெருமாலும் சைவ சிவனும் சமாதானமாகி போனதன் குறியீடாகவும் இருக்கலாம். அழகருக்கு சர்க்கரை நிரப்பிய செம்பில் தீபம் காட்டுவது பாத்தியா ஓதுவது போல் இருக்கிறது ஒன்றுபட்ட இந்து மதம் இஸ்லாமோடு ஒன்றுபட்டு நிற்கிறது. துலுக்க நாச்சியார் கதையும் இதற்கு வலுவூட்டுகிறது. மாலிக்காபூர் படையெடுப்பில் தோன்றிய சச்சரவை கடம்பவன மக்கள் என்றோ மறந்து விட்டார்கள் என்பதையும் இது சொல்லாமல் சொல்லுகிறது.

**வைபவத் திருவிழா**

அழகர் ஆற்றில் இறங்குவது இப்படி எந்த வகையில் பார்த்தாலும் இணக்கத்தின் சாட்சியாக சமரசத்தின் மாட்சியாக இருக்க இந்த வருஷம் அவர் சிவப்பு பட்டோடு வந்ததும் கஷ்டமாகத்தானிருந்தது. அவரவர் அவரவருக்குத் தோன்றியதை சொல்லிக் கொண்டிருந்தார்கள். வழிப்பாட்டின் மூலமாகவும் பண்டிகைகள் மூலமாகவும் மேல் சாதி-கீழ் சாதி என்ற பாகுபாடின்றி இறைவனை வழிப்பட்டதை நூலாசிரியர் தனது படைப்புக்களில் வலியுறுத்துகிறார். வைகை ஆற்றில் இறங்கும் வைபவத் திருவிழாவே குறிப்பிடுகிறார்

**ஆயா வருக வையை நதி அடைய**
**சேவை செய்பவருக்கு**
**மாயப்பிறவி மாற்றி வைக்கும்**
**மணிவண்ணா வருக**
**கண்ணா வருக.**

அழகர் வருகை பத்து பாடல் 12 என்று அழகர் வருகை பத்து நூலில் குறிப்பிட்டது போல நூலாசிரியரும் வைகை நதியையும் கள்ளழகரையும் வர்ணித்துள்ளார். கள்ளர் திருக்கோலத் தோற்றத்தினை பேராசிரியர் தொ. பரமசிவம் வெகு சிறப்பாக வர்ணிக்கிறார். **“ஒரு கையில் வளைதடி எனப்படும் தோற்றமாகும்”** இதனை அடியொற்றியே நூலாசிரியரும் அழகர் ஆற்றில் இறங்கும் விழாவை விவரிக்கிறார். பேராசிரியர் தொ. பரமசிவம் அவர்களும் அழகர் கோயில் பற்றி கூறும் போது,

> **இறைவன் இத் திருக்கோலம் பூணுவதற்கு காரணமாக இக்கோயிற் பிரமாணப் பணியாளர்கள் ஒரு கருத்தினை கூறுகின்றனர். நீ ‘ஒருவருக்கும் மெய்யனல்லை’ என்று பெரியாழ்வாரும் ‘வஞ்ச கள்வன் மாமாயன் என்று நம்மாழ்வாரும் இத்தலத்து இறைவனை பாடியிருக்கின்றனர். அப்பாசுரங்களின் பொருட்டாகவே அழகர் கள்ளர் வேடம் பூண்டு வருகிறார் என்பது அவர்களின் கருத்தாக்கும். (*கடம்பவனம்,* பக். 68)**

இதனையே அருணனும் கூறுகிறார்.

**இக்கோவிலோடு தொடர்புள்ள நாட்டுப்புற மக்கள் அனைவரும் பிற்படுத்தப்பட்ட அல்லது தாழ்த்தப்பட்ட ஜாதியாராகவே இருப்பதனை இக்கோயில் திருவிழாக்களை நேரில் காண்போர் எளிதில் உணர இயலும். ஆண்டாரின் சமயத்தார்களிலும் திருப்புவனம் சமயத்தாரைத் (நாயுடு) தவிர ஏனையோரனைவரும் கள்ளர், இடையர், பள்ளர்-பறையர் ஆகிய சாதியரே. கோயில் திருவிழாக்களை ஆய்வாளர் கூர்ந்து நோக்கிய போது குறிப்பாக கள்ளர், இடையர், பள்ளர், பறையர், வலையர் ஆகிய சாதியினர் இக்கோவிலோடு உறவு கொண்டிருப்பது தெரிய வந்தது.**

நூலாசிரியரும் சித்திரைத் திருவிழா பற்றியும், இறைவன் கள்ளர் வேடத்தில் எழுந்தருள்வது பற்றியும், தன்னுடைய *கடம்பவனம்* நூலில் குறிப்பிடுகிறார். அழகர் கோவிலுக்கு செல்லும் தியாகுவும், ஈஸ்வரனும் அங்குள்ள கருப்பசாமி சன்னதிக்கு போவதையும், கருப்பசாமியை பற்றியும் அங்கு வழிபாடுவோரின் சாதிப் பற்றியும் குறிப்பிடுகிறார்.

**அந்த பகுதியில் உள்ள கள்ளர்கள், பிள்ளைமார்களுக்கு கருப்புதான் குலதெய்வம். பிறந்ததிலிருந்தே அந்த பிணைப்பு உருவாகிவிடுகிறது. முதல் மொட்டை அவருக்குத்தான். காது குத்தல் அங்கேதான். நல்லது பொல்லாதது எதற்கும் உத்தரவு வாங்குவது கருப்பிடம்தான். உக்ரமாக சாமியாடிக் கொண்டு கயிற்றுச் சவுக்கால் தங்களை தாங்களே அடித்துக் கொள்வதைப் பார்க்கவே பயங்கரமாக இருக்கும். உள்ளே இருக்கும் வெறியோ உளைச்சலோ, அவ்வளவும் இங்கே கொட்டப்படும். அவ்வளவு அனலுக்கும் சந்தனக் கருப்பு உருகவில்லை. ஆண்டாண்டு காலமாய் அது தாங்கிக் கொண்டிருக்கிறது. (*கடம்பவனம்*, பக். 229)**

அண்ணன்மார் சாமி கதை என்ற கதைப்பாடல் மாயவன் கடல் கடைந்த போது கருப்பசாமி பிறந்ததாகக் கூறி கருப்பசாமியின் பிறப்பினைத் திருமாலோடு தொடர்பு படுத்துகிறது. மதுரை வட்டாரத்தில் காணப்பெறும் கருப்பசாமியின் சிலைகள் அனைத்தும் தென்கலை வைணவ திருநாமத்துடன் வைணவ சார்பு பெற்றிருப்பதும் இக்கருத்தினை வலியுறுத்துகின்றது. இதையொட்டியே கடம்பவனத்திலும் கருப்பசாமி என்னும் நாட்டுப்புற தெய்வத்தையும் அதை வழிபடும் பக்தர்களின் சாதி பிரிவுகளும் குறிப்பிடுகின்றன. அழகர் கோயிலின் உள்ளே பெருமாலும் வெளியே பதினெட்டாம்படி கருப்பசாமியும் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் ஆய்வாளர் பக்தவசலபதி நாட்டார் தெய்வங்களும் வழிபாட்டுக் குருக்களும் கூறுவது போல கடம்பவனம் புதினத்திலும் உயர்சாதியினரும் ஏனைய சாதியினரும் ஒன்று கூடி திருமாலை வழிபடுவதை காணமுடிகிறது.

**சமத்துவ பார்வை**

நூலாசிரியர் *கடம்பவனம்* புதினத்தில் பல சமயங்களில் சாதி சமய வேறுபாட்டையும் வருண பாகுபாட்டையும் எதிர்த்து குரல் கொடுக்கிறார். வள்ளலாரின் பாடலுக்கு மீனாட்சியம்மன் கோவிலில் பட்டாபிஷேகம் தினத்தன்று அம்பிகா ஆடினாள். சொல்லின் சக்தி முகத்தில் தெரிந்தது. முகமே சொல்லானது சொல்லை முகமானது. சப்தமே தேசஸ் ஆகிற அற்புதம் தான் பரதம் போலும். பாவனையில் மிகவும் தேறியிருந்தாள். கண்ணிகளுக்கு அடுத்து ஆடினாள்.

**வெவ்வினைக்காடெலாம் வேரோடு வெந்தது**
**வெய்ய மாமாயை விரிவற்று நொந்தது**
**செவ்விய ஞானம் சிறப்புற வந்தது**
**சித்திகள் யாவையும் செய்திடத் தந்தது (*கடம்பவனம்*, பக். 400)**

Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880

அனைவரும் நிமிர்ந்து உட்கார்ந்தார்கள். நாயுடுவின் முகத்தில் ஏக கம்பீரம். வெற்றி பெருமிதத்தை தனது முகத்தில் கொண்டு வந்து அந்த சபை முழுக்க நிரப்பினாள். மனம் முழுக்க நிரப்பினாள். "வெவ்வினைக்காடு வேரோடு வெந்தது" எனும் சொற்களுக்கு அவள் வதனம் காட்டிய ஜாடையில் அன்னக்குழி மண்டபம் சடசடவென்று சரிந்து விழுந்தது.

**சாதி சமயச் சழக்கெலாம் அற்றது**
**சன்மார்க்க ஞான சபைநிலை பெற்றது**
**மேதியிற் சாகாத வித்தையைக் கற்றது**
**மெய்யருட் சோதி என் உள்ளத்தில் உற்றது**

ஆஹா! வள்ளலார் மிகப்பெரிய ஞானி உத்தம ஞானி. சாகாத வித்தை எனப்பட்டது. சாதி சமயச் சழக்குகளிலிருந்து விடுபடுவது தானா? அது அவ்வளவு கஷ்டம் என்பதால்தான் அதை சாகா வித்தை என்றாரா?

**அற்புதம் அற்புத மே-அருள்**
**அற்புதம் அற்புத மே"**
**முத்தாய்ப்பு வைத்து ஆடினாள் (*கடம்பவனம்*, பக். 400)**

வள்ளலாரின் **சமரச சன்மார்க்க நெறியை நான்கு வருணத்தவரும் சமம்** என்ற கருத்தை நூலாசிரியர் அழுத்தம் திருத்தமாக இக்காட்சியில் பதிவு செய்துள்ளார்.

**முடிவுரை**

அருணன் தன் புதினங்களில் வருணப் பாகுபாடு தவறு. சாதி சமய பேதம் இல்லை என்பதை வெகு அழுத்தமாக பதிவு செய்கிறார். அவரது கதை மாந்தர்கள் பல்வேறு விதமான சமூகப் பின்னணியில் இருந்து வந்தாலும் அவர்கள் மற்றவர்களை ஒற்றுமையுடனும், அக்கறையுடனும், மரியாதையுடனும், நடத்துவது புலப்படுகிறது. மதம் என்பது மனிதனைப் பிரிக்கக்கூடாது என்பது அருணன் புதினங்களில் அடித்தளமான கருத்தாகும். ஹரிஜன ஆலய பிரவேசத்தை வெகு விரிவாக காட்சிப்படுத்திய அருணன். இறைவன் முன் அனைவரும் சமம் என்ற கருத்தினை அழுத்தமாக பதிவு செய்கிறார்.

**குறிப்புகள்**

[1] இராஜ் கௌதமன். *கலித்தொகை-பரிபாடல் தொகுப்பு*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பதிப்பகம், 2020.
[2] இரா. இளங்குமரன். *மதுரைகாஞ்சி*. புரட்சிக் கவிஞர் மன்றம் பதிப்பகம், மதுரை-2014.
[3] புலியூர்க் கேசிகன். சிலப்பதிகார தெளிவுரை. கொற்றவை பதிப்பகம், 2014.
[4] அருணன். கடம்பவனம். வசந்தம் வெளியீட்டகம், மதுரை, 2015.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** ***இந்த ஆய்வுக் கட்டுரையைத் திருத்திய முனைவர் த. செபுலோன் பிரபு துரை அவர்களுக்கு மனமார்ந்த நன்றி.***
**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.